[1990 ஏப்ரல் 6

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மேல்நிலைப் பள்ளிகளில் அரசியல் பாடம்.

*2221. திரு. சோ. பால்ராஜ் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மேல்நிலைப் பள்ளிகளில் அரசியலையும் பாடமாக கற்றுத் தர திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே,

மேல்நிலைக் கல்விப் பாடத்திட்டத்தின் பகுதி '3'-ல் அரசியல் அறிவியல் பாடம் (Political Science) ஒரு விருப்பப் பாடமாக ஏற்கெனவே வைக்கப்பட்டுள்ளது.

திரு. சோ. பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அரசியலில் 18 வயது வந்தவர்கள் வாக்களிக்கலாம் என்ற நிலைமை இருப்பதால் அவர்களுக்கு அதை முக்கியப் பாடமாக வைத்து கற்றுக் கொடுத்தால் அவர்களுக்குள்ள அரசியல் அறிவு தெளிவடைய நல்ல வாய்ப்பு இருக்கும் என்கின்ற காரணத்தால் அதனை வருகிற ஆண்டு முதல் எல்லா வகுப்புகளுக்கும் பாடமாக வைக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, பாடத் திட்டங்களை வகுப்பதற்காக ஒரு தனி அறிஞர் குழு, அதாவது கல்வியாளர்களின் குழு இடம் பெற்றிருக்கிறது. அந்தக் கல்வியாளர்கள் குழுவில், என்னென்ன வகையான பாடங்களை மாணவர்களுடைய வகுப்புத் தரத்திற்கு ஏற்ப அமைக்கலாம் என்பது தீர்மானிக்கப்படுகிறது. இந்தப் பாடத் திட்டம் அதிக அளவுக்கு முக்கியத்துவம் பெறவேண்டும் என்று அவர்கள் கருதுவார்களேயானால் அப்போது ஒரு வேளை அதிகம் இடம் பெறச் செய்யலாம்.

திரு. சோ. பால்ராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற ஆண்டிலிருந்து இதனை ஏற்படுத்த முடியுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, தீர்மானிக்க வேண்டியவர்கள் நாமல்ல. ஆலோசனை வேண்டுமானால் வழங்கலாம்.

1990 ஏப்ரல் 6]

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசியல் பாடத்தோடு கூட பெண்களைப் பற்றிய பிற்போக்குக் கொள்கைக்கு எதிராகவும் வரதட்சணைக் கொடுமைக்கு எதிராகவும் அதாவது இதுபோன்ற சமூகக் கொடுமைகளுக்கு எதிராகவும் பள்ளி மாணவர்களுக்கு அறிவுரை, போதனை வழங்க அரசு ஆலோசனை கூறுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சமூகவியல் என்ற பாடம் இடம் பெற்றிருக்கிறது. அந்தப் பாடத்தில் இந்தக் கருத்துக்களும் இடம் பெறும்படியாக ஆலோசனை கூறப்படும்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் செனட், சிண்டிகேட் அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்.

*7565. திரு. உ. ரா. வரதராசன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் செனட், சிண்டிகேட் அமைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமல் செயல்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்த அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தப்பட அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அறியும்.

(ஆ) அரசு முயற்சி எடுத்து வருகிறது.

9–05 மணி

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டிலிருந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமல், இப்பல்கலைக் கழகத்தினுடைய செனட், சிண்டிகேட் அமைப்புகள் எல்லாம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதுசம்பந்தமாக, உயர்நீதிமன்றத்திலேயும் பிரச்சினைகள் எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. அந்தப் பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தர், வழக்குகளை விரைவாக முடிப்பதற்கோ, சிண்டிகேட், செனட் தேர்தல்களை விரைவாக நடத்தி முடிப்பதற்கோ எந்தவித முயற்சியும் எடுக்காமல் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்ற குற்றச் சாட்டும் எழுந்திருக்கிறது. ஆகவே, இந்த அமைப்புகளுக்குத் தேர்தல்கள் நடத்துவதற்கு, உடனடியாக அந்த வழக்கையும் விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.